## தமிழ்நாட்டில் 15,320 பேருக்கு வேலைவாய்ப்புகள்!

# ரூ.7020 கோடியில் 26 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்!

## ஜெர்மனியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்து!

**டசெல்டோர்ஃப், செப். 3 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.9.2025) ஜெர்மனியில் நடைபெற்ற TN RISING ஜெர்மனி முதலீட்டாளர்கள் மாநாட்டில் தமிழ் நாட்டிற்கு ரூ.3819 கோடி முதலீடுகளை உறுதி செய்தார்.**

**முதலமைச்சர் அவர்களின் வருகையால் ஜெர்மனியில் 26 நிறுவனங்களுடனான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் முதலீடுகள் மொத்தம் ரூ.7020 கோடியாக உயர்ந்து, 15,320 நபர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாகியுள்ளன.**





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான TN Rising Europe முதலீட்டு இயக்கத்தின் ஒரு பகுதியாக ஜெர்மனியில் நடைபெற்ற தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாட்டில் ரூ.3819 கோடி மதிப்பிலான 23 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன. இந்த ஒப்பந்தங்கள் தமிழ்நாட்டில் 9,070 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.

இதன்மூலம், முதலமைச்சர் அவர்களின் வருகையால் ஜெர்மனியில் 26 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் கையெழுத்திடப்பட்ட மொத்த முதலீடுகள் ரூ.7020 கோடியாக உயர்ந்து, 15,320 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளன.

இதில் நார்பிரெம்ஸ் (ரூ.2000 கோடி முதலீடு மற்றும் 3,500 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்), நோர்டெக்ஸ் குழுமம் (ரூ.1000 கோடி முதலீடு மற்றும் 2,500 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்), மற்றும் ஈபிஎம்பாப்ஸ்ட் (ரூ.201 கோடி முதலீடு மற்றும் 250 நபர்களுக்கு வேலை வாய்ப்புகள்) ஆகிய முன்னர் கையெழுத்திடப்பட்ட மூன்று முக்கிய ஒப்பந்தங்களும் அடங்கும்.

முக்கியமாக, தமிழ்நாட்டில் ஏற்கனவே செயல்பட்டு வரும் பல நிறுவனங்கள் மீண்டும் முதலீடுகள் செய்து விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ள முன்வந்துள்ளன. இது தமிழ்நாட்டின் ஒப்பற்ற தொழில் துறை சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நிர்வாகத் திறன் மீதான தங்கள் நம்பிக்கையை எடுத்துக் காட்டுகிறது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, வாகன கூறுகள், தொழில்துறை உபகரணங்கள் மற்றும் மேம்பட்ட ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு ஆகியவற்றில் உலகளாவிய தலைவர்களை இந்த மாநாடு ஒன்றிணைத்தது. முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தங்களாக வென்சிஸ் எனர்ஜி (ரூ.1068 கோடி முதலீடு மற்றும் 5,238 நபர்களுக்கு வேலை வாய்ப்புகள்), பிஏஎஸ்எஃப் (ரூ.300 கோடி முதலீடு மற்றும் 100 நபர்களுக்கு வேலை வாய்ப்புகள்), பெல்லா பிரீமியர் ஹேப்பி ஹைஜீன் (ரூ.300 கோடி முதலீடு மற்றும் 200 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்), ஹெர்ரென்க்னெக்ட் இந்தியா (ரூ.250 கோடி முதலீடு மற்றும் 400 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்), பல்ஸ் (ரூ.200 கோடி முதலீடு மற்றும் 500 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்), விட்சென்மேன் இந்தியா (ரூ.200 கோடி முதலீடு மற்றும் 450 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்) மற்றும் மாஷ் எனர்ஜி (ரூ.200 கோடி முதலீடு மற்றும் 200 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்) ஆகியவை அடங்கும்.

சுகாதாரம் மற்றும் மருத்துவத் தயாரிப்புகளில் பெல்லா பிராண்டைத் தொடர்ந்து போலந்தை தளமாகக் கொண்ட பன்னாட்டு நிறுவனமான பெல்லா ஹைஜீன், திண்டுக்கல் மாவட்டத்தில் அதன் நவீன சுகாதாரப் பொருட்கள் உற்பத்தி வசதியை விரிவுபடுத்துகிறது.

ஆட்டோமொபைல் துறைக்கான நெகிழ்வான உலோக குழல்கள் மற்றும் விரிவாக்க இணைப்பான்களில் முன்னணியில் உள்ள ஜெர்மன் நிறுவனமான விட்சென்மேன் குழுமம், தமிழ்நாட்டில் ஆட்டோமொடிவ் மற்றும் தொழில்துறை பயன்பாடுகளுக்கான உற்பத்தியை விரிவுபடுத்துகிறது.

பிஏஎஸ்எஃப் சுற்றுச்சூழல் கேட்டலிஸ்ட் மற்றும் மெட்டல் சொல்யூஷன்ஸ் (ECMS) அதன் செங்கல்பட்டு உற்பத்தி ஆலையை விரிவுபடுத்துகிறது. இந்த நிறுவனம் வினையூக்கிகள், உறிஞ்சிகள், பேட்டரி பொருட்கள் மற்றும் விலைமதிப்பற்ற உலோக தீர்வுகளில் சேவைகளை அளித்து வருகிறது.

கியர் இல்லாத நேரடி இயக்கி தொழில்நுட்பத்தில் நிபுணத்துவம் பெற்ற ஜெர்மன் காற்றாலை உற்பத்தியாளரான வென்சிஸ் எனர்ஜி ஏஜி, தமிழ்நாட்டில் காற்றாலை பாகங்கள் உற்பத்தி ஆலையை அமைக்கிறது.

சுரங்கப்பாதை துளையிடும் இயந்திரங்களில் உலகளவில் முன்னணி நிறுவனமான ஹெர்ரென்க்னெக்ட், அதன் சென்னை ஆலையை விரிவுபடுத்துகிறது. மும்பை கடற்கரைச் சாலை மற்றும் சென்னை மெட்ரோ போன்ற திட்டங்களை இந்நிறுவனம் அதன் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இயந்திரங்கள் மற்றும் பாகங்கள் மூலம் செயல்படுத்தும்.

முதலமைச்சர் அவர்கள் BMW குழுமத்தின் மூத்த தலைவர்களுடன் தமிழ்நாட்டில் புதிய முதலீடுகளை மேற்கொள்வது குறித்து கலந்துரையாடினார். அப்போது ஆட்டோமொடிவ் மற்றும் மின்சார வாகன உற்பத்தியில் தமிழ்நாட்டின் சிறப்பினை எடுத்துரைத்து, BMW நிறுவனம் அதன் செயல்பாட்டை தமிழ்நாட்டில் அதிகப்படுத்திட அழைப்பு விடுத்தார். இச்சந்திப்பின்போது, BMW குழும நிறுவனத்தின் மூத்த தலைவர்கள், தமிழ்நாட்டின் வலுவான மின்சார வாகன உட்கட்டமைப்பை மேற்கோள் காட்டியது, மாநிலத்தின் மீதான அந்நிறுவனத்தின் ஆர்வத்தை மீண்டும் உறுதிப்படுத்தியது.

ஜெர்மனியின் இரட்டை தொழில் பயிற்சி மாதிரியை தமிழ்நாட்டிற்குக் கொண்டு வருவதற்காக நெக்ஸ்ட் மிட்டல்ஸ்டாண்ட் (ஆஸ்பில்டங்) உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. 120 மாணவர்களுடன் தொடங்கி அடுத்த பத்தாண்டுகளில் 20,000 ஆக அதிகரிக்கும் இந்த திட்டம், தமிழ்நாட்டு இளைஞர்களிடையே உலகளாவிய திறன் தரத்தை உயர்த்தும்.

முதலமைச்சர் அவர்களின் ஐரோப்பா பயணம் அடுத்த கட்டமாக இங்கிலாந்து நாட்டில் தொடரும், அங்கு மேலும் பல முதலீட்டாளர்கள் சந்திப்புகள் மற்றும் இங்கிலாந்து வாழ் தமிழர்கள் சந்திப்பு நிகழ்வுகளும் நடைபெறும்.

இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி. அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தமிழ்நாடு, ஜெர்மனியின் ‘வடக்கு ரைன் வெஸ்ட்பாலியா’ – இரு மாநில உறவுகளை மேம்படுத்த

# முதல்வர் மு.க.ஸ்டாலின் - அமைச்சர், அதிபர் ஹென்ட்ரிக் வுஸ்ட் சந்திப்பு!

## எரிசக்தி, தொழில் 4.0, மேம்பட்ட உற்பத்தி, ஆராய்ச்சி குறித்து விவாதித்தனர்!

**டசெல்டோர்ஃப், செப்.3-**

**தமிழ்நாடு - ஜெர்மனியின் வடக்கு ரைன் வெஸ்ட்பாலியா ஆகிய இரு மாநில உறவுகளை மேம்படுத்த அம்மாநில அமைச்சர் அதிபர் ஹென்ட்ரிக் வுஸ்ட்டை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சந்தித்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஜெர்மனி மற்றும் இங்கிலாந்துக்கான 8 நாள் பயணத்தின் ஒரு பகுதியாக, நேற்று (2.9.2025) டசெல்டோர்ஃப் நகரில் உள்ள வடக்கு ரைன் வெஸ்ட்பாலியா மாநில அதிபர் அலுவலகத்தில் வடக்கு ரைன்வெஸ்ட்பாலியா (NRW) மாநிலத்தின் அமைச்சர்அதிபர் ஹென்ட்ரிக் வுஸ்ட் அவர்களை சந்தித்துப் பேசினார்.

இச்சந்திப்பு, இந்தியாவின் தொழில் மற்றும் சமூக ரீதியாக மிகவும் முன்னோடி மாநிலமாக விளங்கும் தமிழ்நாடு; ஜெர்மனியின் பொருளாதாரத்தில், உயர் மதிப்பு உற்பத்தி, பசுமை ஆற்றல் மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பத்தில் உலகளவில் முன்னணி மாநிலமாக விளங்கும் வடக்கு ரைன் ஆகிய இரு மாநிலங்களின் தலைமையை ஒன்றிணைத்துள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் அமைச்சர்அதிபர் ஹென்ட்ரிக் வுஸ்ட் இடையேயான சந்திப்பின்போது, மின்சார இயக்கம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, தொழில் 4.0, இரட்டை தொழில் பயிற்சி, மேம்பட்ட உற்பத்தி, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு போன்ற துறைகளில் இரு மாநிலங்களின் ஒத்துழைப்பு குறித்து விவாதிக்கப்பட்டது.

நடுத்தர மற்றும் சிறு தொழில்கள் துறையில் கூட்டாண்மைகள் மூலம் இரு மாநிலங்களும் உறவை மேலும் வலுப்படுத்த விரும்புகின்றன. தமிழ்நாட்டின் மிகவும் திறமையான மற்றும் படித்த இளைஞர்கள் ஜெர்மனியின் திறமையான மனிதவளத்திற்கான வளர்ந்து வரும் தேவைக்கு பங்களிக்க வழிவகை செய்வது குறித்தும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விவாதித்தார்.

மேலும், இந்த சந்திப்பின்போது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வடக்கு ரைன்வெஸ்ட்பாலியா (NRW) மாநிலத்தின் அமைச்சர்அதிபர் ஹென்ட்ரிக் வுஸ்ட் அவர்களையும், அம்மாநில அமைச்சர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்களை கொண்ட குழுவினையும் தமிழ்நாட்டிற்கு வருகை தருமாறு கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாடு மற்றும் வடக்கு வெஸ்ட்பாலியா, பல்வேறு காரணிகளில் சமமானவை ஆகும். குறிப்பாக, இரண்டு மாநிலங்களும் வாகன உற்பத்தி, மின்னணுவியல் மற்றும் இயந்திரங்களுக்கான உற்பத்தி, காலநிலை மீள்தன்மை மற்றும் புதுமை சார்ந்த வளர்ச்சி போன்றவற்றில் முக்கியத்துவம் அளிக்கின்றன. நிலைத்தன்மை, தொழில்நுட்பம் மற்றும் மக்களை மையமாகக் கொண்ட வளர்ச்சியால் எதிர்காலத்தை வடிவமைப்பதில் இரு மாநிலங்களும் இயற்கையான கூட்டாளிகள் ஆவர்.

இச்சந்திப்பின்போது, முதலமைச்சர் அவர்களுடன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் டாக்டர் பு. உமாநாத், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, பொறுப்பு துணைத் தூதர் விபாகாந்த் சர்மா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

அமைச்சர் – அதிபர் ஹென்ட்ரிக் வுஸ்ட் அவர்களுடன் வடக்கு வெஸ்ட்பாலியா மாநிலத்தின் மூத்த அலுவலர்கள் மத்திய, ஐரோப்பிய, சர்வதேச விவகாரங்கள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மற்றும் மாநில சான்சலரி தலைவர் நத்தனேல் லிமின்ஸ்கி, ஐரோப்பிய மற்றும் சர்வதேச விவகாரங்களுக்கான அரசு செய்தித் தொடர்பாளர் மற்றும் மாநில செயலாளர் கிறிஸ்டியன் வியர்மர், அமைச்சர்அதிபரின் தலைமை அலுவலர் மார்செல் கிராத்வோல், சர்வதேச விவகாரங்களுக்கான இயக்குநர் டாக்டர் பிராங்க் ஹோச்சாப்ஃபெல் மற்றும் ஐரோப்பிய மற்றும் சர்வதேச விவகாரங்கள் கொள்கை திட்டமிடல் பிரிவு அலுவலர் டாக்டர் மாக்சிமிலியன் கீக்கர் ஆகியோர் உடனிருந்தனர்.

முன்னதாக, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ரூ.7020 கோடி முதலீட்டிற்கான 26 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இவற்றின் மூலம் 15,320 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாகும். இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் பல ஜெர்மன் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் மீண்டும் புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ளவும், விரிவுபடுத்தவும் முன்வந்துள்ளன.

இது தமிழ்நாட்டின் நிர்வாகம் மற்றும் பொருளாதாரத்தின் உறுதியான நம்பிக்கையை எடுத்துக்காட்டுகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது ஐரோப்பிய பயணத்தின் அடுத்த கட்டமாக இங்கிலாந்து நாட்டில் முதலீட்டாளர் சந்திப்புகளை தொடர்வார்.



ஆலந்தூர் தொகுதி, வட்ட கிளை இளைஞர் அமைப்பாளர் துணை அமைப்பாளர் ஆய்வு கூட்டம் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்றது. அருகில் பகுதிச் செயலாளர்கள் என்.சந்திரன், ப.குணாளன், நகரச் செயலாளர் டி.பாபு, ஒன்றியச் செயலாளர் ஜி.கே.ரவி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் மற்றும் வட்டச் செயலாளர்கள் உள்ளனர்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (02.09.2025) வார்டு எண் 55 பேரக்ஸ் தெரு மற்றும் வார்டு எண் 57 தண்ணீர் தொட்டி தெருவில் பல ஆண்டுகளாக சுகாதாரமற்ற நிலையில் வாழ்ந்து வந்த குடிசைவாசிகளுக்கு மறுவாழ்வு திட்டத்தின் கீழ், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தால் கட்டப்பட்ட தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில் மண்டல குழு தலைவர் பி.ஸ்ரீராமுலு பகுதிச் செயலாளர் எஸ்.ராஜசேகர் மாமன்ற உறுப்பினர் தாஹா. நவீன், வட்டக் கழக செயலாளர் எல்.சத்யநாராயணன் ஆகியோர் உடன் இருந்தனர்.